நெசவாளர்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு வரி (சந்தைக் கட்டணம்) இரத்து செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான உரிய சட்டத் திருத்தம் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கொண்டுவரப்படவிருக்கிறது என்பதைக் கூறி, அமைகிறேன்.

2. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். சுருக்கமாக நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு சதவிகித சந்தை நுழைவு வரியை இரத்து செய்து, நலிந்து, பட்டினிச்சாவுகளுக்கும், கஞ்சித்தொட்டிகளுக்கும் ஆளாகி வந்த நெசவுத் தொழிலாளர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினை விதி 110-ன்கீழ் வெளிட்டிருக்கிறார்கள். தமிழக அரசினுடைய நிதிநிலை மிக மோசமான ஒரு சூழலில் இருந்தாலும், நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கு சிறு தொழிலாளர் வர்க்கத்தின் வேண்டுகோளை ஏற்று, இந்த வரி விதிப்பை நீக்கம் செய்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலங்காலமாக நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் விலை அதிகமாக விற்கின்ற பஞ்சினால், அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இந்தக் கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு சந்தை நுழைவு வரியை இரத்து செய்து, அவர்களுக்கான ஒரு விடிவுகாலத்தை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இது நெசவுத் தொழிலாளர்களுக்கு 100 சதவிகிதம் உதவியாக இருக்கும்.*

[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்] [2021 செப்டம்பர் 4

அந்தவகையிலே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பை வரவேற்கின்றேன். பாராட்டுகின்றேன்.

முற்பகல் 10–05

ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். நேற்று, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் ஐயா வ.உ.சி. அவர்களின் 150–வது ஆண்டு விழாவினை முன்னிட்டு, 14 அறிவிப்புகளை மாண்புமிகு முதலைமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்புகளுக்கு நான் மரியாதை செலுத்த வேண்டுமென்று ஒரு வார்த்தைதான் பேச வேண்டுமென்று கேட்டேன். ஆனால், நேரமின்மை காரணத்தினால், நன்றி சொல்ல வாய்ப்பில்லாமல் கடந்து போய்விட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 14 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் கோரிக்கைகளை மட்டுமல்ல, மக்களுடைய மனதிலே இருக்கிற எண்ணங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிந்துகொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. எப்போதுமே அறிவுக் கூர்மையோடு அவர் தயாராக இருக்கிறார்; Alert ஆக இருக்கிறார் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். அதையும் வரவேற்று, நன்றி தெரிவித்து, தமிழ்நாடு கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளையும், வாழ்த்துகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரே ஒரு விஷயம், வ.உ.சி. என்கிற பெரும் சொல்லுக்கு, தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கம் சொல்லும்பொழுது, 'வ' என்ற எழுத்து, அவர் 'வழக்கறிஞர்' என்பதைக் குறிக்கும் என்றும்; 'உ' என்ற எழுத்து, 'அவர் உரிமைகளுக்காக வழக்காடினார்' என்பதைக் குறிக்கும் என்றும்; 'சி' என்ற எழுத்து, 'உரிமைகளுக்காகப் போராடி சிறைக்குச் சென்றார்' என்பதைக் குறிக்கும் என்றும் மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வ.உ.சி.–க்கு பெருமை சேர்த்திருக்கின்றார். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்று

2021 செப்டம்பர் 4] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

விதி 110-ன்கீழ் பஞ்சு, கழிவுப் பஞ்சுக்கான ஒரு விழுக்காடு சந்தை நுழைவு வரியை இரத்து செய்வதற்கான சட்டம் இந்தக் கூட்டத் தொடரிலே இயற்றப்படும் என்று அறிவிப்பு செய்திருக்கிறார்கள். நெசவாளர்களுக்கு உதவக்கூடிய இந்த அறிவிப்பிற்காக மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மீண்டும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், கப்பலோட்டிய தமிழர் திரு. வ.உ. சிதம்பரனார் அவர்களின் 150-வது ஆண்டு விழாவை முன்னிட்டு, 14 சிறப்பான அறிவிப்புகளை செய்தமைக்காகவும் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்த பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு சந்தை நுழைவு வரியை இரத்து செய்வதற்கான அறிவிப்பு நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றுவதாக இருக்கின்றது. இது எத்தனையோ இன்னல்களுக்கிடையே அம்மக்களின் வாழ்விற்கு உயர்வு தரும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றது. அதற்காக நானும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த அறிவிப்பை வரவேற்கின்றோம்.*

அதோடு, தெற்குச் சீமையில் புகழ்மிக்க திரு. வ.உ.சி. அவர்களின் 150-வது ஆண்டு விழாவினை முன்னிட்டு, நேற்று அறிவித்த 14 அறிவிப்புகள் எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்த, நெசவாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையிலே பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு சந்தை நுழைவு வரி இரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கின்றேன்.*

நேற்றைக்கு திரு. வ.உ.சி.-யின் 150-வது பிறந்த நாளையொட்டி 14 அறிவிப்புகளை அறிவித்து, இந்த ஆண்டு தூத்துக்குடி, திருநெல்வேலியில் உருவாகும் அரசுக் கட்டடங்களுக்கு அவருடைய பெயர் சூட்டப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

***திரு. வி.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களின் நெடுநாள் கோரிக்கைகளை நிறைவேற்றுகிற முறையில், நெசவாளர்கள்மீதும், அவர்களின் எளிய வாழ்க்கைமீதும் அக்கறை கொண்டுள்ள நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு சந்தை நுழைவு வரியை இரத்து செய்துள்ளதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வரவேற்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

முற்பகல் 10—10

***திரு. ம. சிந்தனை செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறம் சார்ந்த நிலையில் நின்று, போராடினார்கள் என்று சொல்வதைவிட, அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள் என்கிற அளவிலே, நெசவாளர்களின் முயற்சிகள் அமைந்திருந்தன. அந்த அறம்சார்ந்த முயற்சிகளையெல்லாம் அங்கீகரித்து, பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு சந்தை நுழைவு வரியை இரத்து செய்து, அவர்களின் சுயசார்பை உறுதி செய்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நெஞ்சார நானும் வரவேற்கிறேன்.*

நேற்று விடுதலைப் போராட்ட வீரர் திரு. வ.உ.சி. அவர்களின் 150-வது பிறந்த நாள் விழாவையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அத்தனை அறிவிப்புகளை நானும் நெஞ்சார வரவேற்று அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

2021 செப்டம்பர் 4]

***திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அறிவிக்கப்பட்ட அறிவிப்பு மிகவும் முக்கியமான ஓர் அறிவிப்பு. சமுதாயத்தில் மிகவும் பின்தங்கியிருக்கின்ற, நெசவுத் தொழிலை மேற்கொண்டிருக்கின்றவர்களின் வயிற்றில் பால் வார்த்ததுபோல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு என்பது அமைந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு சதவிகித சந்தை நுழைவு வரியை இரத்து செய்து, விவசாயிகளின் மத்தியிலும், நெசவாளர்களுக்கும் இன்று ஒரு விடியலைத் தேடித் தந்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு எனது நன்றியையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நேற்றைய தினம் கப்பலோட்டிய தமிழர் திரு. வ.உ. சிதம்பரனார் அவர்களின் 150-வது ஆண்டு விழாவைக் கொண்டாட வேண்டுமென்று நிறைய அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள்.

திருநெல்வேலி மண்டபம் புனரமைப்பு, அவர் பயின்ற ம.தி.தா இந்து மேல்நிலைப் பள்ளி 1 கோடி ரூபாய் செலவில் புனரமைப்பு போன்ற திட்டங்களை அறிவித்திருப்பது, பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரிய செயலாக நான் நினைக்கிறேன்.

நான் அமைச்சராக இருந்த காலகட்டத்தில், திருநெல்வேலியில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாருக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டது. இந்த 150-வது ஆண்டு விழாவோடு சேர்த்து, அதே பள்ளியில் படித்த பாரதியாருக்கும் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டும் என்று என்னுடைய வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆண்டுதோறும் இதை அரசு விழாவாக திருநெல்வேலியில் மணிமண்டபம் அமைந்திருக்கின்ற இடத்தில் கொண்டாட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

***திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டின் முதல் ஆதாரத் தொழில் வேளாண்மை. வேளாண்மைக்கு அடுத்து இரண்டாவதாக

இருக்கின்ற தமிழ்நாட்டின் தொழில், நெசவு. நெசவாளர்கள் தொடர்ந்து நலிந்துவரக்கூடிய நிலை, மனிதனுக்கு ஆடை கொடுத்து மானத்தைக் காக்கக்கூடிய நெசவாளர்கள் எங்கள் வாழ்வு நலிந்து வருகின்றதே, விளக்கேற்றி வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கக்கூடிய இந்த அரிய தருணத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ், பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு சந்தை நுழைவு வரி இரத்து செய்யப்படும் என்ற அந்த மகத்தான அறிவிப்பு, நெசவாளர்கள் மத்தியிலும், பஞ்சு உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் என எல்லோருடைய மத்தியிலும் மிகப்பெரிய வரவேற்பைப்பெறும்.

குறிப்பாக, தமிழ்நாடு சமூக நீதியின் பிறப்பிடம் என்று சொல்வதற்கு, இதுவும் ஓர் அடையாளம். காரணம், நம்முடைய தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் நெசவாளர்கள் ஒரு பெரும் பிரிவினர். இரண்டாவது, மகத்தான தொழில். அதுவும் குறிப்பாக மக்கள்தொகையும் அதிகம். ஆகவே, இந்த நெசவாளர் மக்களுக்கு சமூக நீதி கிடைத்திருக்கிறது என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றியையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நேற்று, இதேமாதிரி, விதி 110-ன்கீழான அறிவிப்பில், நம்முடைய இந்திய விடுதலைப் போராட்ட வீரர், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.-ன் 150-வது பிறந்த நாள் விழாவிற்கென வெளியிடப்பட்ட பல்வேறு சிறப்பு அறிவிப்புகளையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வரவேற்கின்றேன். நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னொரு முக்கியமான நிகழ்வாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு தமிழக அரசு ஓர் அரசாணையை வெளியிட்டிருக்கிறது. அந்த அரசாணையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் நீங்கள். . .

திரு. ஜி.கே. மணி: இது ஒரு நல்ல அறிவிப்புதான். ஒன்றைச் சேர்த்துக்கொள்ளக் கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு விஷயங்கள் பதிவு செய்தாகிவிட்டன. அடுத்ததைப் பிறகு சொல்லலாம். இரண்டிற்கும் நன்றி.

2021 செப்டம்பர் 4]

திரு. ஜி.கே. மணி: *அதாவது, நம்முடைய தமிழக அரசு, தமிழ் வளர்ச்சிக்கு, தமிழை வளர்த்தெடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டான அரசாணை. 2010 ஆம் ஆண்டு சட்ட திருத்தம் மற்றும் 2020 ஆம் ஆண்டு சட்ட திருத்தத்தை முன்னெடுத்து, அதில் திருத்தங்கள் செய்து தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் 20 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படும் என்ற ஒரு மகத்தான அறிவிப்பு. இது தமிழ் வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு எடுத்த மிக முக்கியமான முயற்சி. இது எல்லோரும் எதிர்பார்த்த ஒன்று. தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்று சொல்கின்ற வேளையில், போட்டித் தேர்வுகளும் தமிழில் எழுதப்பட வேண்டும், தமிழில் எழுதினால் மட்டுமே முன்னுரிமை என்ற ஒரு வரியைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளையும் முன்வைக்க விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் இன்று செய்திருக்கின்ற அறிவிப்பு, உண்மையிலேயே நெசவாளர்கள் மத்தியில் மிகப் பெரிய மறுவாழ்விற்கான அறிவிப்பாகும். ஒரு காலத்தில் குளிர்பிரதேசமான ஐரோப்பா போன்ற கண்டங்களிலிருந்தெல்லாம் பஞ்சு வாங்குவதற்கும், பருத்தி வாங்குவதற்கும் நம்முடைய நாட்டின்மீது படையெடுத்து வந்தார்கள். ஆனால், தற்போது அந்தத் தொழில்களெல்லாம் நலிந்து, கஞ்சித்தொட்டி திறக்கும் அளவிற்குப் போய்விட்டன. ஆகவே, இந்த ஆட்சி அதிசய ஆட்சியா அல்லது ஆச்சரியமூட்டும் அரசா என்று எண்ணுகிற அளவிற்கு, அனைத்துத் தரப்பு மக்களையும் அரவணைத்து, எல்லா மக்களுக்காகவும், எல்லா தொழில்களுக்காகவும் 'நான் இருக்கிறேன்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கூறியிருக்கின்ற இந்த அறிவிப்பு மிகவும் வரவேற்கத்தகுந்த அறிவிப்பு. இந்த அறிவிப்பின் மூலமாக பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு சந்தை நுழைவு வரியை இரத்து செய்திருப்பதை மிகவும் வரவேற்கத்தகுந்த அறிவிப்பாகப் பார்க்கிறோம்.*

[திரு. கு. செல்வபெருந்தகை][2021 செப்டம்பர் 4 முற்பகல் 10—15

குறிப்பாக, குன்றத்தூர் பகுதியில் 90 சதவிகிதம் நெசவுத் தொழிலாக இருக்கிறது. அது எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அங்கு கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு ஒவ்வொரு வீட்டிலும் தறி போட்டிருப்பார்கள், ஒவ்வொரு வீட்டிலும் நெசவுத் தொழில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுது எல்லோருமே வாடகைக்கு விட்டுவிட்டார்கள். வெளி மாநிலங்களிலிருந்து இங்கு வேலைபார்ப்பதற்காக வரும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு, migrant labourers-க்கு வாடகைக்கு விட்டுவிட்டதால் அந்தத் தொழிலே நலிந்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பால்,மீண்டும் அந்தத் தொழில் புத்துணர்வு பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு வந்திருக்கிறது. ஆகவே, இந்த அறிவிப்பை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வரவேற்கிறோம், பாராட்டுகிறோம், நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், நேற்றையதினம் வ.உ. சிதம்பரனார் அவர்களுக்கு சிறப்பு சேர்த்து 14 அறிவிப்புகளைச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.

***திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு விழுக்காடு சந்தை நுழைவு வரியை இரத்து செய்திருக்கிறார்கள். இதைப் பாராட்டிப் பேசுகின்ற மற்றும் நன்றி சொல்கின்ற உறுப்பினர்கள், இந்த வரி தள்ளுபடி என்பது நெசவாளர்களுக்கு நேரடியாகப் போய்ச் சேர வேண்டும் என்கிற உணர்வோடு நன்றி சொல்கிறார்கள். இந்த பஞ்சு, கழிவுப் பஞ்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வரித் தள்ளுபடி யாருக்கு நேரடியாகப் போய்ச் சேரும் என்று சொன்னால், பஞ்சு Mill வைத்திருக்கின்ற, பஞ்சு கொள்முதல் செய்கின்ற முதலாளிகளுக்குத்தான் இந்த வரித் தள்ளுபடி போய்ச் சேருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த வரித் தள்ளுபடி என்பது, 1% tax.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள். அது யாருக்குப் போய்ச் சேர்ந்தாலும்,

விலை குறையும் என்பதுதான் அதன் உட்பொருள். நீங்கள் நன்றி சொல்லிவிட்டீர்கள்; உங்கள் கருத்தையும் பதிவு செய்துவிட்டீர்கள். திரு. வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பிறந்த மண்ணிலிருந்து வந்திருக்கும் மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள், கையை உயர்த்திக்கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) அடுத்து பேச வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் நன்றி சொல்லி அமருங்கள்.

***மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செக்கிழுத்த செம்மல், சுதந்திரப் போராட்டத் தியாகி, தன் சொந்த சொத்துக்களையெல்லாம் விற்று ஆங்கிலேயரை எதிர்த்து கப்பல் விட்ட கப்பலோட்டிய தமிழர், தூத்துக்குடியிலுள்ள Madura Coats நிறுவனத்தின் தொழிற்சங்கத் தலைவராகவும், வழக்கறிஞராகவும், தமிழ்ப் பற்றாளராகவும் அவர் வாழ்ந்த பூமியைச் சேர்ந்தவள் நான் என்பதை இங்கே பதிவு செய்துகொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தியாகத் திருவுருவம் திரு. வ.உ. சிதரம்பரனார் அவர்களின் 150-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, அவர்களுடைய பெருமையைப் போற்றும் வகையில், பறைசாற்றும் வகையில், எதிர்கால இளைஞர்கள் அறிந்துகொள்ளும் வகையில், 14 சிறப்பான அறிவிப்புகளை அறிவித்தார்கள். அதற்காக நான் என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும், தமிழகத்தின் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி, நன்றி என்று என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற ஏழை, எளிய, நெசவாளர் குடும்பங்களையெல்லாம் பாதுகாக்கக்கூடிய அளவிற்கு இன்றைக்கு பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான ஒரு சதவிகித சந்தை நுழைவு வரியைத் தள்ளுபடி செய்கிறேன் என்று அறிவித்து, தமிழகத்தில் இருக்கின்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்களின் கோரிக்கைகளையெல்லாம் அறிந்து, குறுகிய காலத்தில் இந்த அறிவிப்பினை செய்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் துறையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விதி 110-ன்கீழ் அறிவிப்பு செய்ததற்கு மட்டும்தான், நன்றி மட்டும்தான் சொல்ல வேண்டும். அதுதான் மரபு. அதில்* debate *எல்லாம் ஒன்றும் கிடையாது. அதன்மீது கருத்தும் சொல்ல முடியாது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இத்துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்ற 60-வது நாளில் நூற்பாலைப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க கோயம்புத்தூருக்குச் சென்றேன். அங்கு* SIMA-The Southern India Mills Association *பிரதிநிதிகளுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினேன். அங்கு சென்றபோது, அவர்கள் வைத்த முதல் கோரிக்கையே இதுதான். அதுமட்டுமல்ல, மற்றவர்கள் எல்லோரும் அங்கு சென்றபோதும் அப்பகுதி மக்கள் வைத்த கோரிக்கை பஞ்சு, கழிவுப் பஞ்சு மீதான இந்த 1% சந்தை நுழைவு வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதுதான். மேலும், அவர்கள் நிறைய கோரிக்கைகளை வைத்தார்கள். நான் அன்றைக்கே அவர்களிடம் சொன்னேன். எங்கள் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதுகுறித்து ஆலோசித்து, கவனத்தில் கொண்டு, நிச்சயமாக நிறைவேற்றுவார்கள் என்று நான் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு 1%* Cess *வரியை இரத்து செய்துள்ளதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-20

அதேபோல், Cess *வரி என்பது* Agriculture Department, *வேளாண்மைத் துறையில்தான் 18,000 கோடி ரூபாய் அளவிற்கு அரசுக்கு வருவாய் வந்துகொண்டிருந்தது. இன்றைக்கு இந்த* Cess *வரியைத் தள்ளுபடி செய்ததால் ஏறத்தாழ 238 கோடி ரூபாய் அரசுக்கு* GST *மூலமாகக் கிடைக்கும். அதுமட்டுமல்ல, இது முக்கியமானது, தரமான பருத்தி கிடைப்பதற்கு இது ஒரு வாய்ப்பு. அதுவல்லாது, நம்மிடம் 6 மில்கள் இருக்கின்றன. இங்கு இருக்கின்ற முதலாளிகள் இதற்குத் தேவையான சரக்கு* stock *வைக்கத் தேவையில்லை. இதற்கு முன்னர் தரமான பஞ்சு, கழிவுப் பஞ்சுப் பொருட்கள் கிடைப்பதில்லை. அதனால்* stock *வைத்திருந்தோம். அதுவும் நமக்கு இலாபகரமாகக் கிடைக்கும். அதனால், இந்தச் சந்தை நுழைவு வரி இரத்து என்பது சாதாரண*

2021 செப்டம்பர் 4] [திரு. ஆர். காந்தி]

விஷயமல்ல. தலைவர் சாதாரணமானவர் அல்ல; அதை முதலில் புரிந்துகொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உலகமே பாராட்டுகிற அளவுக்கு அவர் சிறந்த தலைவர். விதி 110-ன்கீழ் ஒவ்வொரு நாளும் பல அறிவிப்புகளை அறிவிக்கிறார். கடந்த ஆட்சியில்கூட விதி 110-ன்கீழ் தினமும் அறிவிப்புகளை அறிவிப்பார்கள்; அதற்கு ஒன்றும் value கிடையாது. இன்றைக்கு எது அறிவித்தாலும் valuable; மக்கள் பாராட்டுகிற அளவுக்கு இருக்கும். இதற்காக எவ்வளவு பாராட்டுகள் வரப்போகின்றன என்று நாளைக்குப் பாருங்கள். அந்த அளவுக்குப் பாராட்டு இந்த அறிவிப்பிற்குக் கிடைக்கும். அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

விருதுநகர் நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

***திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய குடும்பத் தலைவர் கலைஞர் அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். நமது மக்கள் முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களையும், மாண்புமிகு கழக இளைஞரணியின் செயலாளர் மாண்புமிகு இளைய தளபதி அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் நகராட்சியில் நடைபெற்றுவரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.